நெஞ்சக் கனகல் லுநெகிழ்ந்[த்] உருகத்
தஞ்சத் தருள்சண் முகனுக் கியல்சேர்
செஞ்சொற் புனைமா லைசிறந் திடவே
பஞ்சக் கரவா னைபதம் பணிவாம்

ஆடும் பரிவே[ல்] அணிசே வலெனப்
பாடும் பணியே பணியா[ய்] அருள்வாய்
தேடுங் கயமா முகனைச் செருவிற்
சாடுந் தனியா னைசகோ தரனே 1

உல்லா சநிரா குலயோ கவிதச்
சல்லா பவிநோ தனுநீ யலையோ
எல்லா[ம்] அறயென் னைஇழந் தநலம்
சொல்லாய் முருகா சுரபூ பதியே 2

வானோ புனல்பார் கனல்மா ருதமோ
ஞானோ தயமோ நவில்நான் மறையோ
யானோ மனமோ எனையாண் டயிடம்
தானோ பொருளா வ துசண் முகனே3

வளைபட் டகைமா தொடுமக் களெனும்
தளைபட் டழியத் தகுமோ தகுமோ
கிளைபட் டெழுசூ ருரமுங் கிரியும்
தொளைபட் டுருவத் தொடுவே லவனே 4

மகமா யைகளைந் திடவல் லபிரான்
முகமா றுமொழிந் துமொழிந் திலனே
அகமா டைமடந் தையரென் றயரும்
சகமா யையுள்நின் றுதயங் குவதே 5

திணியா னமனோ சிலைமீ துனதாள்
அணியா[ர] அரவிந் தமரும் புமதோ
பணியா வெனவள் ளிபதம் பணியும்
தணியா வதிமோ கதயா பரனே 6

கெடுவாய் மனனே கதிகேள் கரவா
திடுவாய் வடிவே லிறைதாள் நினைவாய்
சுடுவாய் நெடுவே தனைதூள் படவே
விடுவாய் விடுவாய் வினையா வையுமே 7

அமரும் பதிகே ளகமா மெனுமிப்
பிமரங் கெடமெய்ப் பொருள்பே சியவா
குமரன் கிரிரா சகுமா ரிமகன்

# கந்தர் அநுபூதி

சமரம் பொருதா னவநா சகனே 8



மட்டூர் குழல்மங் கையர்மை யல்வலைப்
பட்டூ சல்படும் பரிசென் றொழிவேன்
தட்டூ டறவேல் சயிலத் தெறியும்
நிட்டூ ரநிரா குலநிர்ப் பயனே 9

கார்மா மிசைகா லன்வரின் கலபத்
தேர்மா மிசைவந் தெதிரப் படுவாய்
தார்மார் பவலா ரிதலா ரியெனும்
சூர்மா மடியத் தொடுவே லவனே 10

கூகா வெனவென் கிளைகூ டியழப்
போகா வகைமெய்ப் பொருள்பே சியவா
நாகா சலவே லவநா லுகவித்
தியாகா சுரலோ கசிகா மணியே 11

செம்மான் மகளைத் திருடுந் திருடன்
பெம்மான் முருகன் பிறவா[ன்] இறவான்
சும்மா விருசொல் லறவென் றலுமே
அம்மா பொருளொன் றுமறிந் திலனே 12

முருகன் தனிவேல் முனிநங் குருவென்[று]
அருள்கொண் டறியா ரறியந் தரமோ
உருவன் றருவன்[ற்] உளதன்[ற்] இலதன்று
இருளன்[ற்] ஒளியன்[ற்] எனநின் றதுவே 13

கைவாய் கதிர்வேல் முருகன் கழல்பெற்[று]
உய்வாய் மனனே யொழிவா[ய்] ஒழிவாய்
மெய்வாய் விழிநா சியொடுஞ் செவியாம்
ஐவாய் வழிசெல் லுமவா வினையே 14

முருகன் குமரன் குகனென் றுமொழிந்[து]
உருகுஞ் செயல்தந்[த்] உணர்வென்[று] அருள்வாய்
பொருபுங் கவரும் புவியும் பரவும்
குருபுங் கவயெண் குணபஞ் சரனே 15

பேராசை யெனும் பிணியில் பிணிபட்[டு]
ஓரா வினையே[ன்] உழலத் தகுமோ
வீரா முதுசூர் படவே[ல்] எறியும்
சூரா சுரலோ கதுரந் தரனே 16

யாமோ தியகல் வியுமெ[ம்] அறிவும்
தாமே பெறவே[ல] அவர்தந் ததனால்
பூமேல் மயல்போ[ய்] அறமெய்ப் புணர்வீர்


4-1 கந்தர் அநுபூதி 1 091010

நாமே[ல்] நடவீர் நடவீ[ர்] இனியே 17

உதியா மரியா வுணரா மறவா
விதிமா லறியா விமலன் புதல்வா
அதிகா வநகா வபயா வமரா
வதிகா வலசூ ரபயங் கரனே 18

வடிவுந் தனமும் மனமுங் குணமும்
குடியுங் குலமுங் குடிபோ கியவா
அடியந் தமிலா அயில்வே லரசே
மிடியென்[ற்] ஒருபா விவெளிப் படினே 19

அரிதா கியமெய்ப் பொருளுக் கடியேன்
உரிதா வுபதே சமுணர்த் தியவா
விரிதா ரணவிக் ரமவே[ள்] இமையோர்
புரிதா ரகநா கபுரந் தரனே 20

கருதா மறவா நெறிகா ணவெனக்[கு]
இருதாள் வனசந் தரவென்[று] இசைவாய்
வரதா முருகா மயில்வா கனனே
விரதா சுரசூ ரவிபா டணனே 21

காளைக் குமரேச[ன்] எனக் கருதித்
தாளைப் பணியத் தவமெய் தியவா
பாளைக் குழல்வள் ளிபதம் பணியும்
வேளைச் சுரபூ பதிமே ருவையே 22

அடியைக் குறியா[து] அறியா மையினால்
முடியக் கெடவோ முறையோ முறையோ
வடிவிக் ரமவேல் மகிபா குறமின்
கொடியைப் புணருங் குணபூ தரனே 23

கூர்வேல் விழிமங் கையர்கொங் கையிலே
சேர்வே[ன்] அருள்சே ரவுமெண் ணுமதோ
சூர்வே ரொடுகுன் றுதொளைத் தநெடும்
போர்வே லபுரந் தரபூ பதியே 24

மெய்யே யெனவெவ் வினைவாழ் வையுகந்[து]
ஐயோ அடியே[ன்] அலையத் தகுமோ
கையோ அயிலோ கழலோ முழுதும்
செய்யோய் மயிலே றியசே வகனே 25

ஆதார[ம்] இலே[ன்] அருளைப் பெறவே
நீதா[ன்] ஒருசற் றுநினைந் திலையே
வேதா கமஞா னவினோ தமனோ
தீதா சுரலோ கசிகா மணியே 26

மின்னே நிகர்வாழ் வைவிரும் பியயான்
என்னே விதியின் பயனிங்[கு] இதுவோ
பொன்னே மணியே பொருளே அருளே
மன்னே மயிலே றியவா னவனே 27

ஆனாவ முதே அயில்வே லரசே
ஞானா கரனே நவிலத் தகுமோ
யானா கியயென் னைவிழுங் கிவெறும்
தானாய் நிலைநின் றதுதற் பரமே 28

இல்லே யெனுமா யையிலிட் டனைநீ
பொல்லே[ன்] அறியா மைபொறுத் திலையே
மல்லே புரிபன் னிருவா குவிலேன்
சொல்லே புனையுஞ் சுடர்வே லவனே 29

செவ்வா[ன்] உருவில் திகழ்வே லவனன்[று]
ஒவ்வா ததெென[வ்] உணர்வித் ததுதான்
அவ்வா[று] அறிவா[ர்] அறிகின் றதலார்
எவ்வா[று] ஒருவர்க்[கு] இசைவிப் பதுவே 30

பாழ்வாழ்[வு] எனுமிப் படுமா யையிலே
வீழ்வா[ய்] எனவென் னைவிதித் தனையே
தாழ்வா னவைசெய் தனதா[ம்] உளவோ
வாழ்வா[ய்] இனிநீ மயில்வா கனனே 31

கலையே பதறிக் கதறித் தலையூ[டு]
அலையே படுமா றதுவாய் விடவோ
கொலையே புரிவே டர்குலப் பிடிநோய்
மலையே மலை கூறிடு வாகையனே 32

சிந்தா குலஇில் லொடுசெல் வமெனும்
விந்தா டவியென் றுவிடப் பெறுவேன்
மந்தா கினிதந் தவரோ தயனே
கந்தா முருகா கருணா கரனே 33

சிங்கா ரமடந் தையர்தீ நெறிபோய்
மங்கா மலெனக் குவரந் தருவாய்
சங்க்ராம சிகா வலசண் முகனே
கங்கா நதிபா லக்ருபா கரனே 34

விதிகா ணுமுடம் பைவிடா வினையேன்
கதிகா ணமலர் கழலென்[று] அருள்வாய்
மதிவா ணுதல்வள் ளியையல் லதுபின்


4-1 கந்தர் அனுபூதி 2 091010

துதியா விரதா சுரபூ பதியே 35

நாதா குமரா நமவென்[று] அரனார்
ஓதா யெனவோ தியதெப் பொருள்தான்
வேதா முதல்விண் ணவர்சூ டுமலர்ப்
பாதா குறமின் பதசே கரனே 36

கிரிவாய் விடுவிக் ரமவே[ல்] இறையோன்
பரிவா ரமெனும் பதமே வலையே
புரிவாய் மனனே பொறையா மறிவால்
அரிவா[ய்] அடியோ டுமகந் தையையே 37

ஆதாளி யையென்[று] அறியே னையறத்
தீதா ளியையாண் டதுசெப் புமதோ
கூதா ளகிரா தகுலிக்[கு] இறைவா
வேதாள கணம் புகழ்வே லவனே 38

மாவேழ் சனனங் கெடமா யைவிடா
மூவே டணையென் றுமுடிந் திடுமோ
கோவே குறமின் கொடிதோள் புணருந்
தேவே சிவசங் கரதே சிகனே 39

வினை ஓடவிடுங் குதிர்வேல் மறவேன்
மனையோடு தியங்கி மயங்கிடவோ
சுனையோடு அருவிற் றுறையோடு பசுந்
தினையோடு இதணோடு திரிந்தவனே 40

சாகா தெனையே சரணங் களிலே
காகா நமனார் கலகம் செயுநாள்
வாகா முருகா மயில் வாகனனே
யோகா சிவஞா னொபதே சிகனே 41

குறியைக் குறியா துகுறித்[து] அறியும்
நெறியைத் தனிவே லைநிகழ்த் திடலுஞ்
செறிவற்[று] உலகோ[டு] உரைசிந் தையுமற்[று]
அறிவற்[று] அறியா மையுமற் றதுவே 42

தூசா மணியுந் தகிலும் புனைவாள்
நேசா முருகா நினதன் பருளால்
ஆசா நிகளந் தகளா யினபின்
பேசா அநுபூ திபிறந் ததுவே 43

சாடுந் தனிவேல் முருகன் சரணம்
சூடும் படிதந் ததுசொல் லுமதோ
வீடுஞ் சுரர்மா முடிவேத மும்வெங்
காடும் புனமுங் கமழுங் குழலே 44

கரவாகிய கல்வி உ ளார் கடைசென்று
இரவா வகை மெய்ப்பொருள் ஈகுவையோ
குரவா குமரா குலிசாயுத குஞ்
சரவா சிவயோக தயாபரனே 45

எந்தா யுமெனக் கருள்தந் தையும்நீ
சிந்தா குலமா னவைதீர்த் தெனையாள்
கந்தா கதிர்வே லவனே உமையாள்
மைந்தா குமரா மறை நாயகனே 46

ஆறா றையும்நீத் ததன்மேல் நிலையைப்
பேறா வடியேன் பெறுமா றுளதோ
சீறா வருசூர் சிதைவித் திமையோர்
கூறா உலகங் குளிர்வித் தவனே 47

அறிவொன் றறநின் றறிவா ரறிவில்
பிரிவொன் றறநின் றபிரா னலையோ
செறிவொன் றறவந் திருளே சிதையே
வெறிவென் றவரோ டுறும்வே லவனே 48

தன்னந் தனிநின் றதுதா னறிய
இன்ன மொருவர்க் கிசைவிப் பதுவோ
மின்னுங் கதிர்வேல் விகிர்தா நினைவார்
கின்னங் களையுங் க்ருபைசூழ் சுடரே 49

மதிகெட் டறவாடி மயங்கி யறக்
கதி கெட் டவமே கெடவோ கடவேன்
நதிபுத் திரஞா னசுகா திபவத்
திதிபுத் திரர்வீ றடுசே வகனே 50

---

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்க்
கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே 51

---


4-1 கந்தர் அனுபூதி 3 091010